Executive Subordinates of Fisheries Department

*719 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Fisheries Executive Subordinate Association has presented a Memorandum containing their demands on 5th October 1974 ;

(*b*) if so, what those demands are ; and

(*c*) the action taken thereon by the Government?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) இல்லை

(இ) & (உ) இக்கேள்விக்கு இடமில்லை.

Ferro-Cement boats

*720 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Government propose to build fishing boats with Ferro-Cement ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) ஆம்.

(இ) மீனளத்துறையின் இரும்பு சிமிட்டிப் படகு ஆராய்ச்சி நிலையம் ஏற்கனவே 38 அடி படகு ஒன்றையும் 15 அடி படகு ஒன்றையும் கட்டி முடித்துள்ளது. 38 அடி நீளமுள்ள இன்னும் 10 படகுகளைக் கட்டும் பணி பல்வேறு நிலையில் நடைபெற்று வருகின்றது. 31, 32 அடி இரும்பு சிமிட்டி படகு கட்டும் திட்டம் அரசின் கருத்தில் உள்ளது.

THIRU B. VENKATASWAMY : Sir, I am given to understand that the best and cheapest boats can be built with Ferro-Cement. So may I know from the Hon. Minister whether more boats will be built with Ferro-Cement?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, நான் சிறிது விளக்கமாக அவர்களுக்குச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்த 'பர்ரோ சிமென்ட்' படகு கட்டுவது ஆசியா கண்டத்திலேயே இரண்டாவதாக நாம் தான் கட்ட ஆரம்பித்து இருக்கிறோம். இதைக் கட்டுவதற்கு செலவும் சிக்கனம். அதே நேரத்தில் கடலில் செலுத்துவதற்கு, செலுத்து கிற நேரத்திலே தீப்பிடித்து பாதகம் ஏற்படாத வகையில்